## ஹஜ்ரத் மூசா (அ) அவர்களுடைய துஆ

1 أَنتَ وَلِيُّنَا فَٱغْفِرْ لَنَا وَٱرْحَمْنَا ۖ وَأَنتَ خَيْرُ ٱلْغَـٰفِرِينَ ﴿١٥٥﴾ وَٱكْتُبْ لَنَا فِى هَـٰذِهِ ٱلدُّنْيَا حَسَنَةً وَفِى ٱلْـَٔاخِرَةِ إِنَّا هُدْنَآ إِلَيْكَ ۚ ﴿١٥٦﴾ (الأعراف: 155،156)

*பொருள்: எங்கள் பாதுகாவலன் நீயே, எனவே, எங்களை மன்னித்து, மேலும், எங்கள் மிது கருணை புரிவாயாக. நீ எல்லோரையும் விட அதிகம் மன்னிப்பவனாய் இருக்கின்றாய் . இன்னும், எங்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் நன்மையை எழுதி வைப்பாயாக, திண்ணமாக, நாங்கள் உன் பக்கம் திரும்பிவிட்டோம். (அல் ஃஆராஃப்:155,156)*

2 قَالَ رَبِّ ٱشْرَحْ لِى صَدْرِى ﴿٢٥﴾ وَيَسِّرْ لِىٓ أَمْرِى ﴿٢٦﴾ وَٱحْلُلْ عُقْدَةً مِّن لِّسَانِى ﴿٢٧﴾ (طٰه: 25،26،27)

*பொருள்: (அதற்கு மூசா வேண்டிக்கொண்டார்) என் இறைவா, என் நெஞ்சத்தை விரிவாக்கியருள்வாயாக, மேலும், என் காரியங்களை இலகு வாக்கித் தருவாயாக. நான் கூறுவதை மக்கள் புரிந்துகொள்ளும் பொருட்டு என் நாவிலுள்ள முடிச்சை அவிழ்த்துவிடுவாயாக (தாஹா:25,26,27)*

3 رَبِّ إِنِّى ظَلَمْتُ نَفْسِى فَٱغْفِرْ لِى فَغَفَرَ لَهُۥٓ ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ ﴿١٦﴾ (القصص: 16)

*பொருள்: என் இறைவா, என்மீது நானே கொடுமை இழைத்துக்கொண்டேன், என்னை மன்னித்தருள்வாயாக, அல்லாஹ் அவருக்கு மன்னிப்பு வழங்கினான். அல்லாஹ் பெரிதும் மன்னிப்பவனாகவும் கிருபை புரிபவனாகவும் இருக்கின்றான் (அல் ஃகஸஸ்:16)*

4 رَبِّ نَجِّنِى مِنَ ٱلْقَوْمِ ٱلظَّـٰلِمِينَ ﴿٢١﴾ (القصص: 21)

*பொருள்: என் இறைவா, என்னை கொடுமையாளர்களிடமிருந்து காப்பாற்றுவாயாக (அல் ஃகஸஸ்:21)*

5 رَبِّ إِنِّى لِمَآ أَنزَلْتَ إِلَىَّ مِنْ خَيْرٍ ﴿٢٤﴾ (القصص: 24)

*பொருள்: என் இறைவா, நீ எனக்கு இறக்கியருளுகின்ற நன்மை எதுவாயினும், நான் அதன் பக்கம் தேவையுடையவனாகவே இருக்கின்றேன் (அல் ஃகஸஸ்:24).*

* * *

www.uzairfalahi.com